**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 331/2022**

Prosecution witness : **2**

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜன் | Caste: | |
| Father'sName: | செல்லத்துரை | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1- A4 produced. A5 present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 23.09.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது ஒட்டப்பிடாரம் தாலுகா, கீழக்கோட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.10.2021 அன்று அதிகாலை 3.25 மணியளவில் கியூபிரிவு காவல் ஆய்வாளர் விஜயஅனிதா எனக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்தார். மேற்படி கிராமத்தில் காவல் ஆய்வாளர் இருப்பதாகவும், போதைப்பொருள் கடத்துவதாக தகவல் தெரிவிக்கப்பட்டதாக கூறினார். மேற்படி எனது உயர் அதிகாரிகளிடம் தகவல் பரிமாற்றம் செய்துகொண்டு மேற்படி இடத்திற்கு 4.10 மணியளவில் சென்றேன். நானும், கிராம உதவியாளரும் இருசக்கரவாகனத்தில் சென்றோம். அங்கு நின்றுகொண்டிருந்த காவல் ஆய்வாளர் மேற்படி கிராமத்தில் போட்டில் போதைப்பொருள் உள்ளதாக தெரிவித்தார். அதை ஆய்வு செய்வதன் பொருட்டு சந்தியாகப்பர் கடற்கரை முன்பு சென்று மேற்படி போட்டின் அருகில் சென்றபோது மேற்படி நபர்கள்

அவர்களை காவல்துறை ஆய்வாளர் விசாரித்தவுடன் பயந்து ஓட முயன்றனர். TN 12 MO 2669 என்ற எண்ணுள்ள நீல நிறத்தில் (புனித அந்தோணியார் துணை) D பெரில் என்று அந்த போட்டில் எழுதப்பட்டிருந்தது. மேற்படி நபர்களை பிடித்து விசாரிக்கும் பொருட்டு சம்மதக்கடிதம் அந்தோணிப்பிச்சை அவர்களிடம் கையொப்பம் பெற்றோம். சம்மத கடிதத்தில் நானும் கையொப்பம் இட்டேன். அதன் பின்னர் போட்டில் ஏறி பார்த்ததில் மேற்படி நடு அறையில் 15 மூடைகள் இருந்ததாக என் முன்னர் எடுத்து வைத்தார்கள். மூடைகளில் உலர் கஞ்சா காணப்பட்டது. அந்த மூடைகளை திறந்துபார்த்தபோது காய், பூ, போல கரும்பச்சைநிறத்தில் கஞ்சா காணப்பட்டது. மேற்படி அந்த மூட்டைகளை பக்கத்தில் உள்ள மீன் ஏலக்கூட எடை மேடையில் எடைபோட எடுத்து செல்லப்பட்டது. அதில் 30 முதல் 40 கிலோ வரையிலான 15 மூட்டைகள் இருந்தன. மொத்தமாக 530 கிலோ இருந்தது. இதன் பொருட்டு மேற்படி எனது மேல் அதிகாரிகளுக்கு நான் தகவல் கொடுத்தேன். மேலும் மேற்படி நபர்களின் மூன்று செல்கள் பரிமுதல் செய்யப்பட்டது மற்றும் D பெரில் TN 12 MO 2669 என்ற போட்டும் காவல்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அத்தாட்சி அறிக்கையை விஜய அனிதா ஆய்வாளர் அவர்கள் ரைட்டரிடம் லேப்டாப்பில் அத்தாட்சி ஆவணம் தட்டச்சு செய்து என்னிடமும் கிராம உதவியாளரிடமும் 6.30 மணியளவில் கையொப்பம் பெற்றார். நாங்கள் காவல்துறையினரிடம் ஒப்படைத்துவிட்டு நான் எனது பணிக்காக சென்றேன். அன்று மாலை 5.30 மணியளவில் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு ஆய்வாளர் சித்ரா அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எங்கள் வீடு துாத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டையில் உள்ளது. கிராம உதவியாளர் வீடு துாத்துக்குடி ஸ்டேட்பேங்க் காலனியில் உள்ளது. நான் எத்தனை கிராமங்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் என்றால் 1 கிராமம்

மற்றும் 3 சிறிய கிராமங்களுக்கு கிராம நிர்வாக அதிகாரியாக உள்ளேன். என்னுடைய பணிக்கான வழிகாட்டுதல்களில் அரசு நிலையாணை மூலமாக வெளியிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்கென்று மூவ்மெண்ட் ரிஜிஸ்டர் இல்லை. தினசரி ரிப்போட்டும் நாங்கள் தாசில்தாருக்கு தரவேண்டியதில்லை. அரசு நிலையாணைப்படி என்னுடைய வரம்பிற் குட்பட்ட கிராமத்தில் குற்ற சம்பவம் சம்பந்தமாக நான் செய்யும் பணியினை குறித்து விரிவான அறிக்கையை எனது உயர் அதிகாரிகளுக்கு கொடுக்கப்படவேண்டும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக போகும் முன்பு யார் என்னை அழைத்தார்கள், எந்த வழக்கிற்காக போகிறேன், எந்த இடத்திற்கு எந்த நேரத்திற்கு போகிறேன் என்ற விபரத்தை வருவாய் ஆய்வாளருக்கு தெரிவித்துவிட்டுத்தான் சென்றேன். என்னுடைய அலவலக குறிப்பில் நான் இந்த வழக்கு சம்பந்தமாக சென்று கலந்து கொண்ட விபரம் உள்ளது என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது நான் என்னுடைய அலவலகத்தில் இந்த வழககு சம்பந்தமாக பெற்ற தகவல் நான் கலந்துகொண்ட முறை, ஆவணங்கள் அனைத்தும் பற்றி குறிப்பு வைத்திருக்கிறேன் என்றும் உயர் அதிகாரியான வருவாய் ஆய்வாளருக்கு மேற்படி தகவல்களை சொல்லிவிட்டுத்தான் சென்றேன் என்றும் சொல்லியுள்ளேன். எனக்கு அன்றைய தினம் மேலதிகாரியாக இருந்த வருவாய் அதிகாரி பெயர் சுகுணா ஆகும். அவர் தூத்துக்குடி டவுனில் தான் குடியிருக்கிறார்கள். நான் என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்ன விபரத்தை நான் வாக்குமூலத்தில் சொல்லிஉள்ளேன். எந்த எண்ணிற்கு தகவல் சொன்னேன் எத்தனை மணிக்கு சொன்னேன் என்ற விபரமும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். வருவாய் ஆய்வாளரை விசாரிக்கும் பட்சத்தில் இந்த விபரங்கள் எல்லாம் தெரியவரும். தருவைக் குளத்தை பற்றி எனக்கு முழுவிபரம் தெரியாது. அந்த ஏரியாவில் உள்ள கடற்கரை விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். என்னுடைய வீட்டில்

இருந்து தருவைக்குளம் வரவேண்டும் என்றால் கோரைப்பள்ளத்தை தாண்டித்தான் வரவேண்டும். நான் சோரீஸ்புரம் வழியாக கட்டடித்து புதுார்பாண்டியாபுரம் டோல்கேட் வழியாக சம்பவ இடம் சென்றேன். தருவைக்குளம் என்பது ஒரு பெரிய மீன்பிடி துறைமுகமாகும். தாழமுத்துநகரிலிருந்து சிப்பிகுளம் வரை மீன் பிடி படகுகள் ஏராளமாக நிற்கும். அங்கு ஏந்த நேரமும் மீன்பிடி தொழில் நடக்கும். தருவைக்குளத்திற்கு கிழக்கு கடற்கரை சாலையிலிருந்து கிழக்கு பக்கமாக செல்லவேண்டும். அங்கிருந்து கடற்கரைக்கு செல்லும் சாலை தருவைக்குளம் மெயின்ரோடாகும். அந்த ரோடு நேராக கடற்கரையில்தான் போய் நிற்கிறது. அந்த கடற்கரை சந்திக்கும் இடத்தில் மீன் பிடிப்பாளர் சங்கம் உள்ளது. அதற்கு முன்னர் கடலோர காவல்படை காவல்நிலையம் உள்ளது. அதற்கு அடுத்தாற்போல் தருவைக்குளம் காவல்நிலையம் உள்ளது. அந்த மீன் பிடிப்போர் சங்கத்திலிருந்து மீன்பிடிப்போர் ஏற வசதியாக பாலம் போடப்பட்டுள்ளது. அந்த இடத்திற்கு இடது பக்கம் படகுகளை தயார் செய்வது மற்றும் ரிப்பேர் செய்யும் இடம் என்றால் சரிதான். அதன் பக்கத்தில் தான் கடல் அந்தோணியார் கோவில் உள்ளதா என்றால் அங்கு இல்லை. படகுகள் தயார்செய்யும் இடத்திற்கு அருகில் தான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு 200 மீட்டர் தள்ளி ECO டுரிசம் உள்ளது. அதை அடுத்தார் போல் ஜெ.ஜெயலலிதா Fishing college உள்ளது. கீழவைப்பார் என்ற ஊர் விளாத்திகுளம் அருகில் உள்ளது. அந்த ஊரை சேர்ந்தவகள் சிப்பிகுளம் கடற்கரை வழியேதான் செல்லவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சிப்பிகுளத்தில் துறைமுகம் இருக்கிறதா என்றால் நான் அந்த பக்கம் சென்றதே இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் அதை தாண்டி உள்ள தீவும் வனத்துறை வசம் உள்ளது என்றால் சரிதான். அந்த தீவு 10 கிலோமீட்டர் தூாரம் இருக்கும். மன்னார் வளைகுடா

உயிர்கோள காப்பகப்பகுதி வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்த கடற்கரை பகுதியில் எத்தனை சர்ச்சுகள் இருக்கிறது என்று கேட்டால் நான் இந்து என்பதால் அவ்வளவு விபரம் தெரியாது. தருவைக்குளம் மீன் பிடிக்கும் துறைமுகத்தில் மீன்பிடிக்க போகவேண்டும் என்றால் மீன்பிடிப்போர் சங்கம் மற்றும் மீன்வள துறையிடம் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். எனக்கு தகவல் கிடைத்து எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றேன் என்றால் 4.10 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். எங்களை இதுபோன்ற குற்ற வழக்கிற்கு அழைக்கும்போது உள்ளூர் காவல்நிலையத்திலிருந்து தகவல் சொல்லுவார்கள். நான் தருவைக்குளம் காவல்நிலையத்தில் கேட்கும்போது எஸ்பிசிஐடி எப்படியப்பா எங்களுக்கெல்லாம் தெரியாமல் கியூபிராஞ்க்கு தகவல் கிடைத்து உனக்கு சொன்னார்கள் என்று கேட்டார்கள். அவர்களிடம் கியூபிராஞ் அழைத்திருக்கிறார்கள் நான் போகிறேன் என்று சொன்னேன். அந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தருவைக்குளம்காவல்நிலையம் மற்றும் கடலோர காவல்படை எல்கைக்கு உட்பட்ட இடம் என்றால் சரிதான். அதனால் தருவைக்குளம் காவல்நிலைய அதிகாரிகள் எஸ்பிசிஐடி இருந்தார்கள். நான் செல்லும்போது சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் இருட்டாக தான் இருந்தது. எனக்கு அங்கே செல்லும்போது அங்கிருந்த அதிகாரிகள் யார்,யார் என்றும் அவர்கள் பெயர் விபரங்களும் தெரியாது. பொதுவாக கப்பல் நிற்கவேண்டுமென்றால் எவ்வளவு ஆழம் என்று எனக்கு தெரியாது. தண்ணீரில் மூழ்கித்தான் பார்க்கவேண்டும். நான் கடற்கரையில் இருக்கும்போது தான் மூட்டைகளை இறக்கி கொண்டு வந்தார்கள். அந்த கடற்கரையில் வைத்துதான் 4 பேர்களை போட்டோ எடுத்தார்கள். அவர்களிடமிருந்து செல்போன்களை வாங்கினார்கள். அவர்களை கைதுசெய்ததால் தான் போட்டோ எடுத்து செல்போன்களை அவர்களிடம் கைப்பற்றினார்கள். அந்த இடத்தில் வைத்து தட்டச்சு

செய்தார்கள். கடற்கரையிலிருந்து கப்பலிலிருந்து இறக்கிய மூடைகளை ஒரு டாடாஏஸ் மினிலாரியில் வைத்து கொண்டுசென்றார்கள். சம்பவ இடத்தில் கையெழுத்து செய்து கொடுத்தவுடன் நானும் எனது உதவியாளரும் சென்றுவிட்டேன். அதன் பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. கஞ்சா பற்றி எனக்கு விபரம் தெரியும். கஞ்சா என்பது என்ன நிறம், என்ன வாசனை, அது எப்படி இருக்கும் என்பது எனக்கு தெரியாது. உலர்கஞ்சா அந்த மூடைகளில் இருந்ததாக நான் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். அந்த 15 மூடைகளில் ஒவ்வொரு மூடையும் எவ்வளவு எடை இருந்தது என்று குறிப்பிட்டு கூறமுடியாது. வெள்ளை நிறத்தை தவிர அந்த சாக்குகளில் எந்த அடையாளமும் கிடையாது. அவர்களை அந்த இடத்திலேயே காவல் ஆய்வாளர் விசாரித்தார்கள். அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தை எழுதிக் கொண்டார்கள். என்னுடைய கிராமஉதவியாளர் சம்மத கடிதத்தில் கையொப்பம் செய்யவில்லை. அவர்களுடைய விபரங்களை வாங்கினார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேன். அந்த இடத்தில் எதிரியிடம் என்ன விசாரித்தார்கள் என மூன்றுவருடமானதால் எனக்கு தெரியாது. சம்மத கடிதத்தில் நான்கு எதிரிகளின் பெயர், விபரங்கள் வரிசையாக இருக்கும் மற்றொரு பக்கம் அவர்களின் விபரங்கள் உள்ளது என்றால் சரிதான். அதில்தான் நான் கையெழுத்து செய்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எப்போதும் ஜன நடமாட்டம் மிகுந்த இடம் என்றால் சரிதான். தருவைக்குளம் மீனவர்களுக்கும் தூத்துக்குடி மீனவர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு சமாதான கூட்டம் நடைபெற்றது என்றால் சரிதான். தருவைக்குளம் மீன்பிடிப்போர் சங்கத்திலிருந்து வடக்கே சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அதை தாண்டியுள்ள கடற்கரைபகுதிகளில் எப்போதும் மீன் பிடி படகுகள் இருக்கும். நான் அந்த சமாதான கூட்டத்திற்கு போனதில்லை. நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் தகவல் பெறவும் இல்லை, சம்பவம் நடந்ததாக

சொல்லப்படும் இடத்திற்கு நான் சொல்வதை போல் செல்லவில்லை என்றாலும் என் முன்பாக தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் ஆவணங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் தயாரிக்கப்படவில்லை என்றாலும் இந்த வழக்கிற்கு ஆதரவாக பின்னிட்டு என்னை சாட்சியாக போட்டதன் பேரில் வழக்கை அனுசரித்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதைப்போல் சொன்ன நேரத்தில் எந்த ஆவணங்களிலும் கையொப்பம் இடவில்லை என்றால் சரியல்ல. எங்களுடைய பணி 24 மணிநேரமும் பணிபுரியும் கிராமத்தில் இருக்க வேண்டும் என்பது அரசாணையாகும். என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கியது எனக்கு தகவல் கொடுத்த கியூபிராஞ்ச் ஆய்வாளர் தான். கிராம உதவியாளருக்கும் கியூபிராஞ்ச் ஆய்வாளரே தொலைபேசியில் தகவல் சொன்னார். என்ஐபி போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆனால் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. நான் 1 ம் எதிரியிடம் சம்மத கடிதம் பெற்றதாக எனது வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன். நான் தற்போது முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் கியூபிராஞ்ச் ஆய்வாளர் லேப்டாப் வைத்திருந்ததாகவும், அதில் அவர் சொல்லச்சொல்ல தலைமைக்காவலர் டைப் செய்தார் என்றும் நான் வாக்குமூலத்தில் சொல்லலியுள்ளேனா என்றால் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. நான் கியூபிராஞ்ச் ஆய்வாளரிடம் எனக்கு தகவல் கிடைத்தவுடன் என் உயர் அதிகாரிகளுக்கு சொல்லிவிட்டுத்தான் சென்றேன் என்ற விபரத்தை புலன் விசாரணை அதிகாரியிடம் சொல்லியுள்ளேன். மூடைகளை ஏற்றிய சிறிய சரக்கு வாகனத்தில் டிரைவர் மட்டும் தான் வந்திருந்தார். நான் காவல்துறைக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தருவைக்குளம் என்பது கிராம ஊராட்சியாகும். அங்கு சுமார் 965 வீடுகள்

உள்ளது என்றால் சரிதான். மக்கள் தொகை சுமார் 7,500 இருக்கும் என்றால் சரிதான். நான் கிராமநிர்வாக அலுவலர் என்பதால் நான் பணிசெய்யும் பகுதியின் பூகோள அமைப்பும், நில அமைப்பும் தெரிந்திருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் பணிபுரியும் இடத்தில் என்ன வகையான தொழில்கள் இருக்கின்றன, என்னவகையான பள்ளிகள் உள்ளன, என்ன வகையான மதங் வழிபாடுகள் இருக்கின்றன என்பன பற்றி சிற்றறிவு இருக்க வேண்டும் என்றால் சரிதான். பொதுவாக கடலின் நிறம் நீலம் என்பதால் வள்ளத்திற்கு நீல நிறமும், நாட்டுப் படகுகளுக்கு பச்சை வண்ணமும் அடிக்கப்படுவது வழக்கம் என்றால் பெரிய வள்ளம் பச்சைக்கலரில் இருக்கும். சிறிய வள்ளங்கள் நீலநிறத்தில் இருக்கும். தமிழக அரசால் மீன் பிடிதொழிலுக்கு டீசல் மாநியத்தில் வழங்கப்படும். மீன் வளத்துறையால் டீசல் மானியம் வழங்கப்படுவதற்கு மீன் வளத்துறையால் பரிந்துரைக்கப்படும் அதற்கு வருவாய் துறையால் சான்றிதழ் வழங்கப்படும் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் புதுக்கோட்டை கிராமம் தூத்துக்குடி பழைய பேருந்து நிலையத்திலிருந்து 11 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மீன் பிடி துறைமுகத்தில் அனுமதிக்கப்பட்ட வள்ளம் சுமார் 250 இருக்குமா என்றால் 350 இருக்கும். நாட்டுப்படகுகள் சுமார் 150 க்கும் மேல் இருக்கும். அதில் சிறுபடகுகள் சுமார் 70-80 இருக்கும். வள்ளம், நாட்டுப்படகுகள் மீன்பிடி தொழிலுக்கானது என்றால் சரிதான். சிறுபடகுகள் வள்ளத்தில், நாட்டுப்படகுகளில் மீன்கள் மற்றும் பொருட்களை ஏற்றி இறக்க உதவும் என்றால் சரிதான். எங்கள் பணிக்காலத்தில் எங்கள் பணி உயர்விற்கு சர்வே குறித்தும், குற்றவியல் வழக்குகள் குறித்தும் தேர்வுகள் நடத்தப்பட்டு தகுதி நிர்ணயம் செய்யப்படும் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலரை கிராம காவலர் என்றும் அழைப்பார்கள் என்றால் சரியல்ல. அங்கு நடைபெறும் குற்ற செயல்களை குறித்து காவல் துறைக்கு தகவல் கொடுத்து உதவியாக இருக்க வேண்டம்

என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன படி எந்த தொலைபேசி அழைப்பையும் பெறவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு செல்வதற்கு வாய்ப்பில்லை என்றும் என் முன்னர் எந்த ஒரு ஆவணங்களும் தயார் செய்யப்படவில்லை என்றும் அதனடிப்படையில் எவ்வித பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் நான் வருவாய் துறையில் இருக்கின்ற காரணத்தால் காவல்துறையினருக்கு உதவிகரமாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக காவல் துறைக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கையெழுத்திட்ட ஆவணங்களில் 3 ம் எதிரியின் பெயர் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. சோதனை சம்மத கடிதத்தில் 3 ம் எதிரி கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை. 3 ம் எதிரியிடமிருந்து தனிப்பட்ட முறையில் எந்த பொருளும் கைப்பற்றடவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னபடி, சொன்ன நேரத்தில் அ.சா.1 அழைத்தன் பேரில் நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு செல்லவும் இல்லை, அங்கு 3 ம் எதிரியை நான் பார்க்கவும் இல்லை, அந்த இடத்தில் வைத்து எந்த சொத்துக்களும் இந்த வழக்கிற்காக கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கையொப்பம் இட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு ஆய்வாளரின் வேண்டுகோளின் படி அதில் பின்னிட்டு நிலையத்தில் வைத்து கையொப்பமிட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3 ம் எதிரிக்கும் மற்ற நபர்களுக்கும் எந்த விதத்திலும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

**<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கியூபிரிவு ஆய்வாளர் என்னிடம் தகவல் சொல்லும்போது TN 12 MO

2669 என்ற நீலநிற வள்ளத்தில் போதைப்பொருள் கடத்துவதாகவும் நேரில் சென்றால் பிடித்துவிடலாம் என்றும் அவருக்கு தகவல் வந்துள்ளதாகவும் என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். நான் அங்கு சென்றபோது கியூ பிரிவு போலீசார் அங்கு இருந்தார்கள். கியூபிரிவு போலீசார் நான் சென்றபின்னர் கரையில் வைத்து என்னிடம் பொருட்களை காட்டினார்கள். மூட்டைகளில் பலவகைகள் உள்ளது என்றால் சரிதான். சணல் சாக்குமூட்டை, பாலிதீன் சாக்குமூட்டை, துணிப்பையால் ஆன சாக்குமூட்டை என பலவகைகள் உள்ளது என்றால் சரிதான், நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன வகையான சாக்குமூட்டை என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். தற்போதும் அது வெள்ளை நிறம் தவிர என்ன வகையான சாக்கு என அரிதியிட்டு கூறமுடியாது என்றால் சரிதான். கடற்கரையில் வைத்து சாக்குமூடைகள் பிரித்து பார்த்தபின்னர் சணலால் கட்டப்பட்டது என்றால் சரிதான். அந்த சாக்குமூட்டைகளை ஆய்வாளர் சீல் வைத்தார். அந்த சீலில் பேப்பர் வைத்து கையொப்பம் போட்டார்களா என்றால் சீல் வைத்ததை பார்த்தேன் கையொப்பம் போட்டதை நான் பார்க்கவில்லை. சீல் வைத்த பின்னர் மூட்டைகள் எங்கு போனது என்று எனக்கு தெரியாது. தருவைக்குளம் சந்தியாகப்பர் கோவிலின் முன்னர் தென் வடலாக கடற்கரை மண் சாலை செல்கிறது என்றால் கடற்கரை போகிறது. சந்தியாகப்பர் கோவிலுக்கு மேற்கு திசையில் மண் சாலை செல்கிறது என்றால் சரிதான். கோவிலின் நேர் எதிரில் கடல் உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ தினத்தில் பார்த்ததாக சொல்லப்படும் வள்ளம் கோவிலுக்கு நேர் எதிரில் கிழக்கு பக்கம் நின்றதா என்றால் இல்லை. கோவிலிலிருந்து கடலை சென்றடையும் வரை இடைப்பட்ட பகுதியில் கடல் மணல் உள்ளது என்றால் சரிதான். கோவிலிலிருந்து கடல் அரிப்பை தடுக்க செயற்கையான சுவர்கள் கற்களால் எழுப்பப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கோவிலிருந்து கடலுக்கு

செல்லவேண்டும் என்றால் கடற்கரை மண்ணை தாண்டித்தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். சந்தியாகப்பர் கோவிலுக்கு செல்ல கடற்கரை மண் சுமார் 45 மீட்டர் தூரம் வரை இருக்கும் என்றால் சரிதான். சந்தியாகப்பர் தோட்டம் கோவிலுக்கு வடக்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். அந்த தோட்டத்திற்கு செல்லவேண்டுமென்றால் கோவிலுக்கு சுமார் 100 மீட்டர் தூரம் செல்லவேண்டுமென்றால் 50 மீட்டர் தூரம் செல்லவேண்டும். போலீசார் என்னை விசாரித்தபோது இந்த வழக்கின் வள்ளமானது கோவிலுக்கு எந்த திசையில், எவ்வளவு தூரத்தில் கடலில் நின்று கொண்டிருந்தது என்ற விபரத்தை நான் கூறினேனா என்றால் கூறவில்லை. சம்பவ தினத்திற்கு பின்னர் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு போலீசார் விசாரித்தபோது சம்பவ தினத்தன்று கப்பல் கடலில் எந்த திசையில் இருந்தது என்று விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சொன்னபடி சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் இந்த வழக்கு சம்பந்தமான சோதனை நடைபெறவில்லை என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றாலும் வழக்கில் சாட்சி வேண்டும் என்பதற்காக பின்னிட்டு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள் இருந்தும் அவர்களை சாட்சியாக போட்டால் உண்மைநிலை தெரிந்து விடும் என்பதால் அரசுக்கு ஆதரவாக என்னை சாட்சியாக போட்டு அதற்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>5 ம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கையொப்பம் செய்த தாக சொல்லப்படும் ஆவணங்களில் 5 ம் எதிரியின் பெயர் இல்லை என்று சொன்னால் மொத்தமே 4 எதிரிகள் தான். 5 ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். மற்ற எதிரிகளுக்கும் இந்த எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை

என்றால் சரிதான். எனக்கு தெரிந்தவரை 4 எதிரிகள் தான். 4 பேரைத்தான் சம்பவ இடத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டது.